சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 19/2018

பெயர். திரு.கணேசன் நாள் 14.03.2025
த/பெ. எல்லப்பன்

**<u>2ம் எதிர்மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 2018ம் வருடம் ஜூன் மாதம் என் அறிக்கையை 2ம் எதிர்மனுதாரரிடம் நான் சமர்ப்பித்தேன். விபத்து குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். நான் போலிஸ் விசாரணை அறிக்கையை வைத்து அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையுடன் சேர்த்து நான் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அடையாளம் தெரியாத வாகனம் தான் 1ம் எதிர்மனுதாரின் வாகனம் என்று சொன்னால் சரிதான். இறந்துபோனவர் பயணம் செய்த காரின் ஓட்டுநரால் விபத்து ஏற்பட்டதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனவே 2ம் எதிர்மனுதாரர் தான் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.